THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No.51/2015**

Deposition of RW.1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **24.08.2022.**

Evidence Recorded Time: 1.34 P.M. to 01.45 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சித்ரா** | Caste | : | |
| S/o & W/o. | : | முருகேசன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சாட்சி சொல்ல அழைப்பாணை அனுப்பப்பட்டது. அவர் சார்பாக அவர் அளித்த அனுமதிக்கடிதத்தின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். அந்த அழைப்பாணையை TN 36 K 0938 என்ற வாகனத்தை ஓட்டிய தங்கவேல், த/பெ.குழந்தைசாமி, கருங்கல்லூர் அஞ்சல், கொளத்தூர், மேட்டூர் வட்டம் என்ற விலாசத்தில் உள்ள ஓட்டுநர் உரிமைத்தை தாக்கல் செய்ய அழைப்பாணை வந்தது. நான் மேற்படி வண்டியின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எ.ம.சா.ஆ.1 ஆகும். அந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் படி ஓட்டுநர் V.சுரேஷா, த/பெ.வெங்கடேஷா, கூகையார் கிராமம் மற்றும் அஞ்சல், கொள்ளேகால் வட்டம், சாம்ராஜ்நகர் மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தங்கவேல் என்பவரின் ஓட்டுநர் உரிமத்தை நான் கொண்டுவரவில்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

என்னிடம் காட்டப்படும் TN 36 K 0938 வாகனத்தின் மோட்டார் மோகன ஆய்வறிக்கையில் மேற்படி வாகனத்தின் உரிமையாளர்/ஓட்டுநர் தங்கவேல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வளிக்கை ம.சா.ஆ.8 ஆகும். போலீசார் கொடுத்த ஆவணத்தில் தங்கவேல் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். தங்கவேலுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றாலும் அவர் முகவரி மாறி மாறி இருந்ததால் ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் அதுபற்றி நான் சொல்லமுடியாது.

ஒம்/—RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.